1994 மே 2]
462-

தாளவாடி கடம்பூர் மலைப் பகுதிகளுக்கு நடமாடும் மருத்துவமனை ஏற்படுத்துதல்

** 25277—திருமதி அ.தி. சரஸ்வதி:*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-

தாளவாடி - கடம்பூர் மலைப்பகுதிகளுக்கு நடமாடும் மருத்துவமனை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திருமதி அ. தி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லையென்று பதில் சொன்னாலும், என்னுடைய கோரிக்கைக்கு ஆம் என்ற பதிலை எதிர்பார்த்து, தமிழக மக்களுக்கு கடவுள் கொடுத்த வரப்பிரசாதமாகத் திகழும், மனிதருள் மாணிக்கமாக அரசு தொட்டில் திட்டம் கண்டு, அநாதைப் பெண் சிசுக்களைக் காத்து ஆதரவு தர நான் இருக்கிறேன் என தமிழகத்தின் அன்னை தெரசாவாகத் திகழும், நாம் எல்லாம் நித்தம் பூஜித்து வணங்கும், நம் இதயங்களில் வீற்றிருக்கும் தெய்வீகத் திருமகள் ஆட்சியில் இல்லையென்ற சொல்லுக்கே இடம் இல்லை. இந்த ஆண்டு சுகாதாரக் குடும்ப நலத் துறைக்காக 1993-94-ஆம் ஆண்டு ரூ. 557,70 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியிலிருந்து மலைப் பகுதி மக்களுக்காக, மருத்துவ வேன், மருத்துவமனை அமைக்கக் குறைந்தபட்சம் ஒரு 25 இலட்சமாவது ஒதுக்கி அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களும் கோரும் இடங்களில் அமைக்கப்படலாம். தாளவாடி, கடம்பூர் மலைப் பகுதிகளில் நீண்ட நாட்களாக தீர்வு காணாத பிரச்சினையாக இது இருக்கிறது. மலைப் பகுதி மக்களுக்கு இந்த நோய்தான் தாக்கப்பட்டிருக்கிறது என்று அவர்கள் அறியாமல், சிலபேர் நோயினால் பாதிக்கப்பட்டு அவர்கள் மருத்துவ வசதி செய்யாமல் இறந்துவிடக்கூடிய சூழ்நிலையும் இருக்கிறது. மருத்துவ வசதி இல்லாமல், பிரசவ காலங்களில் கூட அவர்கள் எல்லாம் சில இடங்களிலே ரொம்பக் கஷ்டப்படுகிறார்கள். இன்னும் நாட்டு வைத்தியத்தையே நம்பியிருக்கிறார்கள். நமது இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் -- நாட்டு வைத்திய முறைப்படி

செய்து அவர்கள் உடல்களை கெடுத்துக்கொள்கிற சூழ்நிலையிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெரியார் மாவட்டத்தை சார்ந்தவர்கள். மலைப் பகுதி பற்றி நன்கு தெரிந்தவர். அதனால், – – தயவுகூர்ந்து, கருணைகூர்ந்து மலைவாழ் மக்களின் நலன் கருதி மருத்துவ வேன் வசதி அமைத்துக் கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொண்டு, அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்வார்களா என்று பேரவைத் தலைவர் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10-10*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாளவாடி மலைப் பகுதியிலே ஏற்கெனவே மூன்று ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. இந்த மூன்று ஆரம்பச் சுகாதார நிலையங்களிலே - தாளவாடியில் இரண்டு மருத்துவர்கள், பயனாபுரத்திலே இரண்டு மருத்துவர்கள், நீர்மானத்திலே ஒரு மருத்துவர் என்று பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பொறுத்தவரையில், அடிப்படையாக அவர்களுக்குத் தேவையான மருத்துவ வசதிகளைச் செய்வதில் எந்த இடையூறும் இல்லை. அதற்குப் பின்னாலே கூடுதலாக அவர்கள் சிறப்பு சிகிச்சை பெறவேண்டும் என்று சொன்னால் அவர்கள் பக்கத்திலே இருக்கிற சத்தியமங்கலத்திற்கு வரலாம். 40 கிலோ மீட்டர் இருக்கிறது. இருந்தாலும் கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிகப் பெரிய அளவிலே அங்கே இருக்கிற பிரச்சினைகள் பற்றித் தெரிவித்திருக்கிறார்கள். ஆரம்பச் சுகாதார நிலையமே பார்த்துக்கொள்ள முடியும் என்றாலும் ஆய்வு செய்துகொள்ளலாம்; என்னால் இப்போது நிச்சயமாக உறுதியாக முடிவைச் சொல்ல முடியாது. நிதிப் பிரச்சினை இருக்கிறது. அதற்குப் பின்னாலே ஒரு தாலுக்காவிலே ஒரு தாலுகா மருத்துவமனைதான் அமைக்கப்படலாம் என்ற விதிமுறை இருக்கிறது. இவைகளை எல்லாம் ஆய்வு செய்து, மலைப் பகுதி என்பதால் அதைப்பற்றித் தனியாக ஆய்வு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம். அதை உத்தரவாதமாக எடுத்துக்கொள்ளக் கூடாது.

திருமதி. அ. தி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதியாண்டில் அதாவது 1993-94-ல் வேன்கள், ஆய்வுக்கூட சாதனங்கள், மருந்துப்பொருட்கள், இன்றியமையாத பொருட்கள் ஆகியவற்றை வாங்குவதற்காக நீலகிரி மாவட்டத்திலே 17 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அதிலே ஒருபகுதியாவது சத்தியமங்கலத்திற்குத் தந்து, கருணைகூர்ந்து அதனை அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

1994 மே 2]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம் தனி. பெரியார் மாவட்டத்திற்கு ஒதுக்கப்படுகிற நிதியில் அதற்கு என்ன தேவையோ அதை வாங்குகிறார்கள். ஆனால் இது தனியாக ஒரு மருத்துவமனை அமைப்பது பற்றிய கேள்வி. ஏற்கெனவே சொன்னபடி தனிப்பட்ட முறையில் ஆய்வு செய்து அதற்குப் பின்னாலேதான் முடிவு சொல்ல முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. பெரியசாமி.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது அந்தப் பகுதியிலே அதாவது தாளவாடி கடம்பூர் பகுதியிலும், தாளவாடியிலும், பசுவநாதபுரத்திலும் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இருப்பதாகச் சொன்னார்கள். இந்தப் பகுதி மலைகள் நிறைந்த பகுதி, வனங்கள் நிறைந்த பகுதி. எனவே நீண்ட நெடிய தூரம் நடந்துவந்து மருத்துவசதி பெற முடியாத சூழ்நிலை இருக்கிறது. தாளவாடியை எடுத்துக்கொண்டால் தலைமுறை, தொட்டபுரம், கோடிபுரம், சிக்கள்ளி, ஜெயகள்ளி, ஜனக்கள்ளி, வேய்தாள்புரம் போன்ற ஊர்கள் வரிசையாக இருக்கின்றன. அதேபோன்று பசுவநாதபுரத்தை எடுத்துக்கொண்டால் காடட்டி, காடுபசுமாளம் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதையெல்லாம் Map-லே பார்த்தால் தெரியும்.

திரு. வே. பெரியசாமி: அதேபோன்று பசுவநாதபுரத்திலும் நிறைய கிராமங்கள் மலைகளின் ஊடே இருக்கின்றன. காடுகள் நிறைந்த பகுதியாக இருப்பதன் காரணத்தாலும், அங்கே வனவிலங்குகள் அதிகமாக இருப்பதன் காரணத்தாலும் —— அருள்கூர்ந்து. உங்களுடைய துறைக்காக இந்த ஆண்டு 614.34 கோடி ரூபாயை நாமெல்லாம் கடவுளாக வணங்கிக் கொண்டிருக்கிற டாக்டர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்கி இருக்கிறார்கள். ஆகவே அருமைச் சகோதரி மாண்புமிகு எ.டி.சரஸ்வதி அவர்கள் அவர்களுடைய தொகுதியைப் பற்றி அதிகமான அக்கறை கொண்டவர்கள். அந்தத் தொகுதியிலும் அவர்களிடத்திலே கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே —— அருள்கூர்ந்து. அந்தப் பகுதிக்கு நடமாடும் மருத்துவமனை உங்கள் நிதியிலிருந்து சிறப்பு நிதியாக அந்த மலைவாழ் மக்களின் மேம்பாட்டுக்காக இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அள்ளி, அள்ளி வழங்குகிற வள்ளல்தன்மையோடு இருக்கிற இந்த நேரத்தில் செய்து தருவீர்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

[1994 மே 2

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் திருமதி சரஸ்வதி அவர்கள் அந்தத் தொகுதிக்கு, குறிப்பாக தாளவாடிக்கு அதிகமாக வசதிகள் செய்ய வேண்டும் என்பதில் அக்கறையோடு இருக்கிறார்கள். அதேபோன்று அந்தப் பகுதியில் நீண்டநாட்களாக இருந்து வந்தவர்கள், பணியாற்றியவர்கள் என்ற முறையில் திரு .பெரியசாமி அவர்கள் மிகுந்த அக்கறை காட்டுகிறார்கள். திரு. பெரியசாமி அவர்கள் வாட்டசாட்டமாக நல்ல உடற் கட்டோடு இருக்கிறார்கள் என்பதைப் பார்த்தாலே தாளவாடி மலைகளிலே நன்றாக இருக்க முடியும் என்பதை அது உறுதிபடுத்துவதாக இருக்கிறது. ஏற்கனவே இருக்கின்ற வசதிகளைப் பொறுத்தவரையில் கூட மலைப்பகுதியில் இருப்பதோடு கீழே சாதாரணப் பகுதியில் இருப்பதை ஒப்பிட்டுப் பார்ப்பதில்லை. கீழே 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்று வைத்தால் மலைப்பகுதியில் 20,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்பசுகாதார நிலையம் என்று வைக்கிறோம். எனவே அப்படிப்பட்ட நிலைகளில் தனிக்கவனம் செலுத்தப்படுகிறது. இருந்தாலும் கூட நான் சொன்னதைப்போல நீண்ட தூரங்கள் வரவேண்டிய அவசியம் இருக்கிறது என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. வனவிலங்கு மற்ற பிரச்சினைகளை எல்லாம் உணர்ந்து கொள்ளாமல் இல்லை. இருந்தாலும்கூட ஒவ்வொரு சின்ன பகுதிக்கும் தனித்தனியாக ஆரம்பச்சுகாதார நிலையம் ஆரம்பிக்கிற அளவுக்கு நிதிவசதி இல்லை என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள் என்று கருதுகிறேன். எனவே நமக்கு மனம் இருந்தாலும் கூட நிதிப்பிரச்சினை இருக்கிற காரணத்தால் ஏற்கெனவே சொல்லியிருக்கிறபடி ஆரம்பச்சுகாதார நிலையங்களை சிறப்பாக ஆக்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள முடியும் என்று கருதிகிறேன். அதேபோல் 8000 பாப்புலேஷனுக்கு ஒரு சப் சென்டர் இருக்கிறது. ஆனால் மலைப்பகுதியிலே 5000 பாப்புலேஷனுக்கு ஒரு சப் சென்டர் என்று வைத்திருக்கிறோம். எனவே டெலிவரி பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் திருமதி சரஸ்வதி அவர்கள் சொன்னதைப் போன்ற பிரச்சினைகள் வருவதற்கான வாய்ப்புகள் இல்லை என்று கருதுகிறேன். இருந்தாலும்கூட நடமாடும் மருத்துவமனையைப் பற்றி ஆலோசிக்கலாம். இதை நீங்கள் முடிவாக எடுத்துக் கொள்ளக்கூடாது. இந்த நடமாடும் மருத்துவமனைகளில் எங்களுக்கு ஒரு சங்கடம் இருக்கிறது. இவ்வாறான நடமாடும் மருத்துவமனைகளில் போகிறவர்கள் கல்யாணத்திற்கு போகிறார்களா, விருந்துக்கு போகிறார்களா அல்லது வேறு எதற்காவது அந்த வண்டிகள் போகிறதா என்பதை கண்காணிப்பது

1994 மே 2]

கடினம் என்கின்ற காரணத்தினால்தான் அதைத் தவிர்க்க வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம். இருந்தாலும் யோசிக்கலாம்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்.463, திரு. வே. தம்புசாமி, இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. ஜி. பழனிசாமி. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

463—

திருவாரூரிலிருந்து கோட்டூர் வரை சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்தை மீண்டும் இயக்குதல்.

****20012—திரு. வே. தம்புசாமி:***

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூரிலிருந்து வடபாதிமங்கலம் வழியாகக் கோட்டூர் வரை சோழன் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் இயக்கப்பட்டு நிறுத்தப்பட்ட பேருந்தை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதுப்பாலத்திலிருந்து கோட்டூர் வரை சாலை மிக மோசமாக இருந்ததால், பேருந்து திருவாரூரிலிருந்து வடபாதிமங்கலம் வழியாக விக்கிரபாண்டியத்திற்கு மாற்றி இயக்கப்பட்டது.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூரிலிருந்து வடபாதிமங்கலம் வழியாக கோட்டூருக்கு சோழன் போக்குவரத்துக் கழகம் பேருந்தை இயக்கி வந்தது. இடையில் சாலைகள் சரியில்லை என்ற காரணத்தால் நிறுத்தப்பட்டிருந்தது. தற்போது அந்தச் சாலைகள் தார்ச் சாலைகளாக போடப்பட்டு அவைகள் நன்றாக இருக்கின்றன. ஆகவே அந்த பஸ்களை மீண்டும் விடுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேருந்து நிறுத்தப்பட்ட காலம் *7-4-1991*-லிருந்து வேறு வழித்தடங்களில் அந்தப் பகுதிகளுக்கு பேருந்துகளை நாங்கள் இயக்கிக் கொண்டிருக்கிறோம். அந்த பால வேலைகள்